# வை.மு. கோதைநாயகி அம்மையாரின் நாவல்களில் காந்திய சிந்தனைகள்

**மோ. கிருத்திகா**
உதவிப் பேராசிரியர், முனைவர் பட்ட ஆய்வாளர்
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** 1

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

வை.மு. கோதைநாயகி அம்மையார் காந்திய வழியில் பதவி ஆசை இல்லாதவராக இருந்துள்ளார். காந்தியின் மீதும், அவர் கொள்கையின் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக இருந்தார். அத்தகைய ஈடுபாட்டைத் தம் நாவல்களில் பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார். காந்தியின் கொள்கைகளான 'தீண்டாமை ஒழிப்பு', மத ஒழிப்பு, சகோதரத்துவம், கதராடை அணிதல் போன்ற முக்கிய கொள்கைகளை தான் மட்டும் பின்பற்றாமல் மக்களும் பின்பற்ற வேண்டும் என நினைத்துள்ளார். அக்கொள்கைகளைப் பரப்புவதிலும், மக்களிடையே காந்தியின் கொள்கைகளைக்கொண்டு சேர்ப்பதிலும் வை.மு.கோதைநாயகி பெரும்பங்கு ஆற்றியுள்ளார்.

## சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுதல்

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாவல் இலக்கியத்தின் முன்னோடியாக விளங்கிய வை.மு.கோ. இலக்கியம், நாடகம், பத்திரிக்கை இசைத்துறைகள் மட்டுமின்றி தேசிய சேவையில் பக்தி உடையவராக விளங்கியுள்ளார். அந்நியத் துணி புறக்கணிப்பு, கள்ளுக்கடை மறியல், ஆங்கிலேயர் எதிர்ப்பு என்று பல போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை தண்டனை பெற்றார். போராட்டங்களில் தான் பெற்ற அனுபவங்களையும், கருத்துக்களையும் தனது படைப்புகளில் காட்சிகளாக்கியுள்ளார். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவதைத் தவிர 144 தடைச் சட்டம் இருந்ததை 'புகழ்மாலை' என்னும் சிறுகதை வெளிப்படுத்துகின்றது.

'தியாகக் கொடி' என்னும் இவருடைய நாவல் 1934- இல் நடந்த சுதந்திரப் போராட்டத்தினை அடிப்படையாகக்கொண்டு இந்நாவலுக்கு ஆங்கில அரசு தடை விதிக்க முயற்சித்தது. ஆனால் அந்நிய ஆட்சியைப் பற்றிய நிபந்தனை மொழிகள் அந்நாவலில் வெளிப்படையாக இல்லாததால், அரசு சட்டப்படி நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்பது தெளிவாகின்றது.

இங்கிலாந்தில் பொருட்களை எந்திரங்களில் பேரளவில் உற்பத்தி செய்வதாலும், குறைந்த விலையில் மூலப்பொருட்களைக் கொள்முதல் செய்வதாலும் அவற்றின் விலை மிகவும் குறைவாக இருந்தது. இந்திய நாட்டின் கைத்தொழில்களால் அவற்றோடு

போட்டி போட முடியவில்லை. பல்வேறு காரணங்களால் இந்தியத் தொழில்கள் முடங்கின. அந்நியப் பொருட்கள் பெருகியதால் அந்நியப் பொருட்களைப் புறக்கணிக்கும் சுதேசி இயக்கம் உருவெடுத்தது. அந்நியப் பொருட்களைப் புறக்கணிக்கும் போராட்டம் இந்திய தேசியத்தை ஒன்றுபடச் செய்தது. அத்தகைய போராட்டத்தையே 'தியாகக் கொடி' என்னும் நாவல் எடுத்துரைக்கின்றது.

**"நம்தேயப் பொருள்கள் கொள்வோம்
நம்தேய உடையணிவோம்
சிந்தை களிப்புடனே
வந்தே மாதரம் என்று சொல்வோம்
நம்நாட்டு விளை - பருத்தி
நம் நாட்டிலே - இருத்தி
நம் நாட்டு கதர் தரித்து"[1]**

என்ற இந்த சுதேசி இயக்கப்பாடல் வை.மு.கோவால் இயற்றப்பட்டது.

இவருடைய "வத்ஸகுமார்" என்னும் நாவல் மகாத்மா காந்தியின் கொள்கைகளை பறைசாற்றும் விதமாகவும், மகாத்மா இந்தியாவின் சாமான்ய மனிதர் அல்லர் என்பதையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

"மகாத்மா காந்தியடிகள், சாமான்ய மனிதர் அல்லர், அவர் இக்கவியின் அவதார புருஷர். அவருடைய ஒவ்வொரு உபதேசமும் தேச விடுதலைக்கு மட்டும் அல்ல. ஒவ்வொரு ஆண் பெண்ணின் மனிதத் தன்மையை அறிந்து கடமையுடன் செவ்வனே வாழ்க்கையை நடத்துவதற்கும் சமூகம் சீர்திருத்தமடைவதற்கும், ஆணிவேர் போன்ற உபதேசம் ஆகும். ஆகையால் நாம் வேடிக்கையார்த்தம் அப்பெரியாரின் ஜன்ம விழாவைக் கொண்டாடியதாக இல்லாமல் அவருடைய உபதேசத்தைப் பரிபூரணமாகக் கிரகித்துப் பயனடையும் வகையில் நடத்த வேண்டும். கடவுள் அவருக்கு, சகல மங்கலங்களையும் கொடுத்து தீர்க்காயுளையும் அளிக்க வேண்டிப் பிரார்த்தனை செய்வோம்"[2] என்னும் வரிகள் மகாத்மாவின்மீது மக்கள் கொண்டிருந்த மதிப்பினை வெளிப்படுத்துகின்றது. கூட்டம் முடிந்ததும் வந்தே மாதரம் பாடலைப் பாடுவது மக்களின் தேசப்பற்றினை உணர்த்துகின்றது.

### தீண்டாமைக் கொள்கை

'ஆயிரம் உண்டிங்கு சாதி' என்றார் மகாகவி பாரதியார். இந்தியாவில் தோன்றி வளர்ந்திருக்கும் சாதிமுறை வெட்ட வெட்ட தோன்றும். அரக்கனின் தலை மேலும் உரம்பெற்று வளர்ந்து வருவதனைப் பார்க்கின்றோம். காந்தியடிகள் சாதிமுறையை ஏற்றுக்கொள்ளவில்லை. சிறுவயதிலேயே தீண்டாமைப் பழக்கத்தை வெறுத்தவர் மக்களுக்கிடையில் சாதி ஏற்றத்தாழ்வு இருப்பதனை நீக்க முயன்றார். தீண்டத்தகாதவர்களாக கருதப் பெற்றவர்களை இறைவனின் பிள்ளைகள் என்ற பொருள்பட 'ஹரிஜனங்கள்' என்று அழைத்தார். இவர்களின் மேம்பாட்டிற்காக 'ஹரிசன சேவா சங்கம்' நிறுவினார். ஹரிசனங்கள் கல்வி கற்கவும், தொழில்களைச் செய்து முன்னேறவும் இச்சங்கம் வலியுறுத்தியது. சாதிமறுப்புத் திருமணத்திற்கும் காந்தியடிகள் ஊக்கமளித்தார். வைதிக குடும்பத்தில் பிறந்து, மிக ஆச்சாரமான வாழ்வினை வாழந்து கொண்டிருந்த வை.மு.கோதை நாயகி அம்மையார் காந்தியின் தீண்டாமை ஒழிப்புப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே பரப்பினார். 'மகிழ்ச்சி உதயம்' என்னும் தம் நாவலில் தீண்டாமை எதிர்ப்பைக் கருவாக வைத்து எழுதியுள்ளார். இந் நாவலில் கதாநாயகன் முகுந்தன் அவன் மனைவி புவனா இருவரும் 'அரிஜன சேவா சங்கம்' அமைத்து அரிஜன சேவையில் ஈடுபடுகின்றனர். பழமையில் ஊறிக் கிடக்கும் முகுந்தனின் குடும்ப உறுப்பினர்களும் சில பழமைவாதிகளும் நாயகனை எதிர்க்கின்றனர். முகுந்தனின் மாமனார் "ஐயையோ! வெட்கக்கேடே! ஏன் மாப்பிள்ளை உமக்கு இம்மாதிரி புத்தி கெட்டு விட்டது. பெரிய படிப்பாளியின் புத்தி இப்படியோ வேலை செய்யும்? நான் சனாதனா தர்ம சபையின் காரியதரிசியாயிற்யே!

உங்கள் தந்தை சனாதனக் கமிட்டியின் உபதலைவராயிற்றே ! இந்த இரண்டையும் நீர் சற்றாவது கவனித்தீரா ? எங்கள் கௌரவத்தில் மண்ணைப் போடுவதற்காகவோ நீங்கள் இப்படி விதண்டவாதம்

செய்கிறீர்கள்"[3] என்று தன் குலப்பெருமையைக் கூறுகின்றார். அரிசன சேவை கூடாது என்கிறார். வர்ணாசிரம தர்மத்தைப் பனற்றி முகுந்தனுக்கு எடுத்துக் கூறுகிறார். இந்நாவலில் இத்தகையச் செய்திகளைப் படிக்கும்பொழுது அக்காலக் கட்டத்தில் தாழ்த்தப் பட்டவர்கள் என்று சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்கள் சமுதாயத்தில் பட்ட இன்னல்களை அறிந்துகொள்ள முடிகிறது. இந்நாவலில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி மறுக்கப்பட்டதையும், அதனையும் மீறி பள்ளியில் சேரும் குழந்தைகள், உயர் வகுப்பு சாதியினரின் குழந்தைகளால் துன்புறுத்தப்படுவதையும் காண முடிகிறது. படிப்பதில் ஆர்வம் ஏற்பட்ட அரிசனக் குழந்தையான மாரியம்மாள் பக்கத்தில் இருக்கும் திண்ணைப் பள்ளிக்கூடத்திற்குச் சென்று அங்கு இருக்கும் ஆசிரியரிடம் தன் படிப்பார்வத்தை தெரிவிக்கின்றாள். இதைக் கண்ட திண்ணைப் பள்ளியின் ஆசிரியருக்கு ஒருபுறம் திக்கென்று தூக்கி வாரிப் போடுகிறது. மறுபுறம் ஆச்சர்யம் தாண்டவமாடுகிறது. இவ்விரண்டையும் தாண்டி ஆத்திரம் பொங்குகிறது.

''யாரது மாரியத்தாளா? பிள்ளாரியின் மகளா ? ஆஹ்ஹா! உனக்கு இத்தனை கொழுப்பும், திமிருமா வந்து விட்டது? பறச்சி என்பதை அடியோடு மறந்துபோய் உயர்ந்த ஜாதி என்று எண்ணி விட்டாயா கழுதை! நாயே! போ! போ! வெளியே போ! ஐயையோ குடி முழுகிப் போய்விட்டதே. பறப்பசங்களெல்லாம் பள்ளிக்கூடத்திற்கு வந்து விட்டதே, இனி ஊருக்கு ஏதோ அனத்தம்தான் வந்திருக்கிறது. சிரார்த்தத்திற்காக மடியாய்த் துணிகளை உலர்த்தி இருக்கின்றேன். இங்கு கிட்ட வந்துவிட்டதே சனியன்கள் என்று கத்தியவாறு அருகிலிருந்த கற்களை எடுத்து வீச ஆரம்பித்தார்''[4] இது போன்ற கொடுமைகள் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று ஒதுக்கப்பட்டவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக காந்திஜி நடத்திய உண்ணாவிரதத்தையும் தன் நாவலில் சுட்டிக் காட்டியுள்ளார் வை.மு.கோ. ''அந்த மகானுபாவனுடைய பரிசுத்தமான இதயத்தில் சதா ஹரிஜனங்களின் நினைவே குடிக்கொண்டு இருக்கிறது. இரவு பகலாக அந்த தியாகமூர்த்தி உங்கள் இனத்தின் விமோசனத்திற்கே பாடுபட்டு வருகிறார். உங்களுக்காகத்தான் அந்த உத்தமன் 21 தினங்கள் உண்ணாவிரதம் இருந்து உங்களைப் பிரிக்காமல் கூட்டுத் தொகுதியை வாக்களித்தார்''[5] என்று தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்கு காந்தியடிகள் போராடியதை தன் நாவலில் எடுத்துக் காட்டுகின்றார்.

1948 மார்ச்சு 2-ம் தேதி திருவல்லிக்கேணியில் வை.மு.கோவால் தொடங்கப்பட்ட 'மகாத்மா சேவா சங்கம்' பெண்களின் முன்னேற்றத் திற்காகப் பாடுபட்டது. மகாத்மாஜி சேவா சங்க நிதிக்காக அம்மையார் நாடகங்களை நடத்தி நிதி திரட்டியுள்ளார். தீண்டாமையை ஒழித்து சகோதரத்துவத்தை உணர்த்த கதைகள் மூலம் முயற்சித்துள்ளார் வை.மு.கோதைநாயகி அம்மையார்.

**கல்விப் பணி**

காந்தியடிகள் சிறந்த கல்வியாளர். நமது நாட்டிற்கும், மக்கள் வாழ்விற்கும் ஏற்ற பயனுள்ள கல்வி முறையைக் கொண்டுவருவதில் தீவிரமாக இருந்தார். இந்தியா கிராம இந்தியாவாக இருப்பதால் கிராம மக்களின் வாழ்வுக்கு ஏற்ற கல்வி முறை வேண்டுமென்று கருதினார். மக்களின் வாழ்க்கைக்காக, கல்வி கிடைக்க வேண்டும் என்பதே காந்திஜியின் கருத்து. அவர் தொடங்கிய சபர்மதி ஆசிரமத்தில் தனது கல்விக் கருத்துக்களைச் செயல்படுத்தினார். வை.மு.கோதைநாயகி அம்மையாரும் பெண் கல்வி திட்டத்தில் தீவிர ஈடுபாடு கொண்டவராக இருந்துள்ளார். அதற்கான முயற்சியிலும் தனது உழைப்பினைக் கொடுத்துள்ளார். பெண் கல்வியின் இன்றியமையாமையை வற்புறுத்திப் பேசும் வை.மு.கோ. பெண்ணடிமைத் தனத்திற்கு வித்திடுவது கல்வியின்மையே என்ற கருத்தை ''முற்காலத்தில் பெண்களுக்கு கல்வி அறிவோ, நாகரிகமோ ஒன்றும் தெரியாது. மூடர்களாக இருந்தமையால், அந்த மூடப் பெண்களை புருஷர்கள் பயமுறுத்தித் தமக்கு அடிமையாக்கி, அடிமைப் போலவே நடத்தி வந்தார்கள். இக்காலத்தில் அந்த அடிமைத் தொழில் என் போன்ற படித்த வகுப்பாரிடம் செல்லமாட்டாது என்ற அடிகளின் மூலம் எடுத்துரைக்கிறார்''[6].

கிருபா மந்திர் என்னும் தனது நாவலில் வரும் கதாநாயகன் முகுந்தன் 'கிருபா மந்திர்' எனும் சமூக சேவை மையத்தைத் தொடங்கி ஆதரவற்றவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்றார். இவ்வாறு தனது கதை மாந்தர்களின் வழி காந்தியின் கொள்கைகளை எடுத்துரைக்கின்றார். மகளிர் எல்லா உலக விஷயங்களையும், கைவேலைகளையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பது வை.மு.கோ.

வின் எண்ணம். அதற்காக மகாத்மாஜி சேவா சங்கத்தின் வழி இந்தி வகுப்பு, சுருக்கெழுத்து வகுப்பு, பாட்டு வகுப்பு, வீணை வகுப்பு, வயலின் வகுப்பு, பகவத் கீதை வகுப்பு தோத்திரப் பாடல் வகுப்பு என பல வகுப்புகள் நடத்தியிருக்கின்றார். வை.மு.கோ. அவர்கள் கல்விமீது அசைக்க முடியாத நம்பிக்கைகொண்டவராக இருந்துள்ளார். அதனால் தன்னால் இயன்ற அளவு கல்விப் பணியைத் தொடர்ந்துள்ளார்.

**அரசியல் ஈடுபாடு**

வை.மு.கோ. அம்மையார் நாட்டின் விடுதலை போராட்டத்தில் பங்கு வகித்துள்ளார். காந்திய வழியில் தன்னை இணைத்துக்கொண்டு பதவிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு, நாட்டு விடுதலையே அவசியம் என்று உணர்ந்தவர். 1925ம் ஆண்டு மைலாப்பூரில் சீனிவாச அய்யங்காரின் இல்லத்திற்குக் காந்தி வருகை புரிந்தபோது அவரை வை.மு.கோ. சந்தித்துள்ளார். காந்தியின் வலிமையான தோற்றமும், கண்களின் கூர்மையும், உறுதியான நாவன்மையும் வை.மு.கோ. அவர்களைக் கவர்ந்துள்ளது. அதுநாள் வரை தேசியம், காங்கிரஸ் கட்சி போன்றவற்றில் நாட்டம் இல்லாத, அதனைப் பற்றி அறிந்திராத அம்மையாருக்கு மகாத்மாவின் சந்திப்பு, பொது வாழ்வில் திருப்பு முனையாக அமைந்தது காந்திஜியைச் சந்திக்கவந்த பெண்களின் அலங்காரங்களையும் அவர்கள் அணிந்திருந்த நகைகளையும் கண்டு ''நம் பாரதத்தாய் அடிமை விலங்கு பூண்டிருக்கும்போது, நீங்களும் ஆபரண விலங்கை பூண்டிருக்கிறீர்களே? என்று கேட்டு அதிசயித்தார். கதரின் மகத்துவத்தை அப்பொழுது அப்பெண்களுக்கு அவர் எடுத்துரைத்தார்''[7]

காந்தியடிகளின் எளிய பேச்சைக் கேட்ட வை.மு.கோ உட்பட பல பெண்களின் மனதில் எழுச்சியை ஏற்படுத்தியது. காந்தியைச் சந்தித்த நாள் முதல் கதர் ஆடையை மட்டுமே உடுத்தி வந்துள்ளார். கதரின் மகிமையை மற்றவர்களுக்கும் எடுத்துரைத்துள்ளார்.

வை.மு.கோ. அம்மையார் அந்நியத் துணி புறக்கணிப்பு, கள்ளுக் கடை மறியல், ஆங்கிலேயர் எதிர்ப்பு என்று தாம் கலந்துகொண்ட விடுதலை போராட்ட அனுபவங்களையும், எண்ணங்களையும் தன்னுடைய நாவல்களில் காட்சிகளாக்கியுள்ளார்.

**''நம் நாட்டு விளை - பருத்தி**
**நம் நாட்டிலே - இருத்தி**
**நம் நாட்டு கதர் தரித்து**
**வருடந்தோறும் நம் நாட்டினின்று**
**அறுபது கோடி பணம் சென்று**
**வறுமைப் பிணியை நம் நாட்டிற்கு**
**வருவித்தல் நன்றோ - புகல்வீர்**
**மாறா மனமுவந்து**
**தீரமாய் கதரணிந்து**
**யாரும் அறிய மொழிந்து**
**பாரில் புகழ் சீர் முகுந்த''[8]**

என்னும் பாடல் வை.மு.கோவால் இயற்றப்பட்டு பெண்கள் குழுவால் ராகத்துடன் வீதிகளில் பாடப்பட்டது. வை.மு.கோ. அம்மையார் கதர்மீது கொண்ட பற்றினையும், தேச பக்தியினையும், காந்திஜி சேவா சங்கத்தின் செயல்பாடுகள் பற்றியும் தம் நாவலில் குறிப்பிட்டுள்ளார்.

**கள்ளுக்கடை மறியல்**

மகாத்மா காந்தியின் சமூகக் கொள்கைகளில் ஒன்று மதுவிலக்கு, கள்ளுக்கடைகளை எதிர்த்துப் பெண்களை ஒன்று திரட்டி முதன் முதலில் வீதிக்கு வந்து போராடச் செய்தவர் தந்தை பெரியார். 1931ல் காந்திஜி கள்ளுக்கடை மறியலில் பெண்கள் ஈடுபட வேண்டுமென்று அழைப்பு விடுத்தபோது வை.மு.கோ கலந்துகொண்டு சிலமுறை சிறை சென்றுள்ளார்.

குடியினால் ஏற்படும் துன்பங்களைத் தனது நாவலில் பல இடங்களில் எடுத்துக் காட்டியுள்ளார். ‘புகழ் மாலை’ என்னும் அவரது நாவலில் குடியினால் குடும்பம் சீரழிந்து போனதைக் காட்டியிருக்கிறார். படித்தவர்கள் குடிப்பதை ஒரு நாகரிகம் எனக் கருதிச் செய்வதை தன் நாவலில் வன்மையாகக் கண்டித்துள்ளார். இளைய தலைமுறையினர் வாழ்க்கைப் பாதை மாறிச் செல்வதனைக் காண முடிகிறது. பெண்கள் வாழ்வை இழந்து துன்பத்திற்கு ஆளாகும் நிலை ஏற்படுகிறது. எனவே மதுப் பழக்கத்தை நாம் அடியோடு விலக்கவேண்டும் என்று தன் நாவலில் வலியுறுத்துகின்றார்.

**முடிவுரை**

வை.மு. கோதைநாயகி அம்மாள் இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க பங்கு வகித்தவர். காந்திய வழியில் தன்னை இணைத்துக்கொண்டு அவர் தம் கொள்கைகளைப் பரப்புவதையே தன் இலட்சியமாகக் கொண்டார். காந்தியக் கொள்கைகளை வெளிப்படுத்துவதற்கு அவரின் சிறுகதைகள், நாவல்கள் கருவியாகச் செயல்பட்டன. காந்தியக் கொள்கைகளான ‘தீண்டாமை ஒழிப்பு, மது ஒழிப்பு, சகோதரத்துவம், பெண் உரிமை, கதராடை அணிதல் போன்றவற்றை தான் பின்பற்றியதோடு பிறருக்கும் அதன் பெருமையை உணர்த்தியவர் வை.மு.கோ. வை.மு.கோ வின் அரசியல் ஈடுபாடு அவரது சமூகச் சேவைகளுக்கு ஒரு தூண்டுகோலாக இருந்தது.

**குறிப்புகள்**

1. பிரேமா, இரா. வை.மு.கோதைநாயகி அம்மாள், ப-39
2. வை.மு.கோதைநாயகி கதைகள் - 10, வத்ஸகுமார், ப-100
3. வை.மு.கோ கதைகள் - 8, மகிழ்ச்சி உதயம், ப-97
4. மேலது, ப-40
5. மேலது, ப-66
6. பிரேமா, இரா. வை.மு.கோதை நாயகி அம்மாள், ப-93
7. மேலது ப-97
8. மேலது ப-39